In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 163/2023 Prosecution witness P.W.18

Name:Kalidoss Calling:

Father Name: Religion:

Village: Caste:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 10-06-2025.

**(Accused 1 produced through V.C. A2 died. A3 to A8 are present. A9 absent, petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல் செட்டிநாயக்கன்பட்டியில் வசிக்கிறேன். நான் சிவில் என்ஜினியராக இருக்கிறேன். ஷேக் பரித் என்பவர் என்னிடம் கிரில் வேலை செய்து வருகிறார். ஷேக்பரித்திடம் இர்பான் என்பவர் உதவியாளராக இருந்து வந்தார். ஷேக்பரித் என்பவர் சொன்னதன் பேரில் என்னிடமிருந்து எனக்குச் சொந்தமான TN-57-AB-4855 என்ற மாருதி ஷிப்ட் சிவப்பு கலர் காரை 2023ம் வருடம் 7வது மாதம் ஒருநாள் எடுத்துச்சென்றார். ஒருவாரம் கழித்து திருப்பிக்கொடுப்பதாக எடுத்துச்சென்றார். அதன் பின்னர் இர்பான் மற்றும் ஷேக்பரித் செல்போன்கள் சுவிட்ச்ஆப் ஆக இருந்தது. அதன் பின்னர் 2023ம் வருடம் 8வது மாதம் ஒருநாள் திண்டுக்கல் வடக்கு காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்து விசாரித்தார்கள். 2023ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 11ம் தேதியன்று நான் திண்டுக்கல் வடக்கு காவல்நிலையம் சென்றேன். அங்கு ஆய்வாளர், காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேற்படி இர்பான், ஷேக்பரித் எப்படி பழக்கம் என்றும் காரை எப்படி கொடுத்தீர்கள் என்றும் விசாரித்தார்கள். நான் விவரங்களை கூறினேன். என்னுடைய முகவரியை பெற்றுக் கொண்டார்கள். வழக்கு பிரச்சனை பற்றி என்னிடம் கேட்டார்கள். எனக்கு தெரியாது என்று சொன்னேன். கார் சம்மந்தமான விவரங்களை எழுதி

கொடுக்கச்சொல்லி பெற்றுக்கொண்டார்கள். என்னை அனுப்பிவிட்டார்கள். என்னை ஆய்வாளர் விசாரித்தார்

**1, 3, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

என்னை ஆய்வாளர் மற்றும் காவல்துணை கண்காணிப்பாளர் ஆகியோர்கள் என்னை விசாரித்தார்கள். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது 18.08.2023 ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது ஷேக்பரித் என்பவர் என்னிடம் காரை எடுத்துச்சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இர்பான் என்பவரைப்பற்றி ஆய்வாளர் விசாரணையிலோ, துணை கண்காணிப்பாளர் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி காருக்குரிய முறையான ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை என்றால் சரிதான்.

**4, 6, 7 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

1 முதல் 3, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.06.10 16:47:33 +0530

Principal District Judge,
Dindigul.